## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 9/2020</u>

நாள் – 01.04.2026

DW 1 – கையூம்கான்

த/பெ – முகமதுகான்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of April 2026)**

### <u>குறுக்கு விசாரணை</u>

நான் 4ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் பைசுதீன் சாகிப் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த பைசுதீன் சாகிப்பிற்கு பாவுதீன் சாகிப் என்ற ஒரே மகன் என்றால் சரிதான். அந்த பாவுதீன் சாகிப்பிற்கு 4 ஆண்குழந்தைகள், 6 பெண்குழந்தைகள் என்று 10 குழந்தைகள் பிறந்துள்ளார்கள். அந்த 6 பெண்பிள்ளைகளிடம் இருந்து 4 ஆண்பிள்ளைகள் கடந்த 16.04.1956ம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவணத்தை எழுதி வாங்கினார்கள் என்றால் சரிதான். அந்த பாவுதீன் சாகிப்பிற்கு 5 மனைவிகள். தற்போது அந்த 5 மனைவிகளில் 4 பேர் இறந்துபோய்விட்ட நிலையில் 5வது மனைவியான கைரூன் பீபி என்பவரிடம் இருந்து கடந்த 15.04.1956ம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவணத்தை மேற்படி 4 ஆண்மக்கள் எழுதி வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். அதனால் தாவா சொத்திற்கு பாவுதீன் சாகிப்பின் 4 ஆண்மக்கள் மட்டும்தான் உரிமையாளர்களாக இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த 4 ஆண்மக்களின் பெயர் சுல்தான் மைதீன் சாயிபு.1, அப்துல் சுபான் சாயிபு.2, அமீனுதீன் சாயிபு.3,

அமானுல்லா சாயிபு.4 ஆவார்கள். அதில் சுல்தான் மைதீன் சாயிபு இறந்து போய்விட்ட நிலையில் அவரது மனைவி பனிபீ , அவரது மகன்கள் சைனுதீன் சாயிபு, நசுருதீன் சாயிபு, ஹபீப், அவரது மகள் தவுலத்துன்னிஷா பேகம் மற்றும் அப்துல் சுபான் சாயிபு, அமீனுதீன் சாயிபு, அமானுல்லா சாயிபு ஆகியோர் சேர்ந்து யாகுப்கான் மக்கள் சிராஜ் அகமதுகான், ஆரிபுல்லா கான், ஷாநவாஸ் பேகம், பசுல் அகமத் கான், ரகிபா பதுல் பேகம், ஷபில் அகமது கான் மற்றும் கருப்பகவுண்டர் ஆகியோருக்கு கடந்த 12.07.1966 ம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வீதம் கிரையம் பெற்ற யாகுப்கான் மக்கள் சிராஜ் அகமதுகான், ஆரிபுல்லா கான், ஷாநவாஸ் பேகம், பசுல் அகமத் கான், ரகிபா பதுல் பேகம், ஷபில் அகமது கான் நபர்கள் 16.04.1956 தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் கண்ட யாகுப்கான் சாயிபு மனைவி ஹமருன்னிஷா பேகம் என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.04.01 18:17:38 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**